**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**
**கலைப் பீடம்**
**கலைமாணி மூன்றாம் வருடப் பரீட்சை (நிகர்நிலை) பருவம் I - 2019/2020**

## GYG 3150 – கடந்த காலக் காலநிலையும் காலநிலை மாற்றமும்

## திறந்த நூற் பரீட்சை

**மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்:**

- வினாத்தாள் 2 ஆம் பக்கத்திலிருந்து தொடங்கும்.
- அனைத்து எழுத்து மூலமான கணிப்பீடுகளும் கட்டாயம் **கைகளால் எழுதப்படல் (handwritten)** வேண்டும். கையெழுத்து **தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும்** இருக்க வேண்டும்.
- **கறுப்பு குமிழ் முனைப் பேனையினைப் (black ball point pen)** பயன்படுத்தி **A4 அளவுடையத் தாளில்** (ruled/lined paper/ or otherwise) விடைகள் எழுதப்படல் வேண்டும்.
- ஒரு நேர் நபர் பரீட்சையைப் (an in-person examination) போன்றே word process அல்லது type set விடைகள் அனுமதிக்கப்படமாட்டாது. பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் பொருத்தமான விதிவிலக்குப் பெற்ற எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இவ்விதி பொருந்தாது (உ.ம். பார்வைக் குறைப்பாடு).
- ஓவ்வொரு விடைத்தாளின் **மேற்பகுதியின் வலப் பக்கத்திலும் சுட்டெண்** எழுதப்படல் வேண்டும். விடைத்தாளின் எந்தவொரு இடத்திலும் உமது பெயரினை எழுத வேண்டாம்.
- பின்வரும் வடிவத்தினைப் (format) பயன்படுத்தி தாளின் கீழ்ப் பகுதியில் (bottom of the page) விடைத்தாள்களுக்கானப் பக்க இலக்கங்களை (number the pages) இடவும். உதாரணமாக விடைத்தாளின் மொத்தப் பக்கங்கள் 5 எனில், பின்வருமாறு 1/5, 2/5…etc பக்க இலக்கங்கள் இடப்படல் வேண்டும்.
- விடைத்தாளின் முதல் பக்கமாக **பொதுவான முகப்புப் பக்கத்தை** (LMS இல் வழங்கப்பட்டுள்ளது) பயன்படுத்தவும். உமது கணிப்பீட்டின் முதல் பக்கமாக இருக்க வேண்டிய முகப்புப் பக்கத்தை நீர் அச்சிடலாம் (print) அல்லது கைகளினால் எழுதலாம்.
- **மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை** விடைத்தாளின் முகப்புப் பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.
- பக்க இலக்க ஒழுங்கின் அடிப்படையில் **விடைத்தாள்களை ஸ்கேன் செய்து (scan) அல்லது புகைப்படங்களாக (take photos) எடுத்து ஒரு தனித்த PDF கோப்பாக (a single PDF file) மாற்றுக.**
- ஸ்கேன் செய்யப்பட்ட படத்தில் விடைத்தாளின் முழுப் பக்கமும் முழுமையாகக் கவரப்பட வேண்டும். அத்துடன் ஸ்கேன் செய்யப்பட்ட படம் தெளிவாகவும், வாசிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.
- தனிப்பட்ட பக்கங்களை தனித்தனியாக பதிவேற்றம் செய்ய LMS அனுமதிக்காது.
- **ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரேயொரு கோப்பு வடிவம் PDF. PDF கோப்பு (file) உமது சுட்டெண்ணைக் கொண்டு பெயரிடப்படல் வேண்டும். உதாரணமாக: A 12345**
- விடைத்தாள்களை JPEG/JPG அல்லது வேறு ஏதேனும் வடிவங்களில் பதிவேற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது**.**
- விடைத்தாளின் இறுதி வடிவத்தினை (final version) நிர்ணயிக்கப்பட்ட **24 மணித்தியால நேரத்திற்குள்** பூர்த்திசெய்வதுடன், LMS இல் பதிவேற்றவும்.
- விடைத்தாள் LMS இல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், சமர்ப்பித்ததற்கான ஒப்புதலாக LMS இன் **முழுப் பக்கத்தினையும்** 'சமர்ப்பிக்கப்பட்டது' என்ற வார்த்தையுடன் **ஸ்கிரீன் ஷாட் (screen shot)** ஆக எடுத்துக்கொள்வதுடன் அதனை உம்முடன் வைத்துக்கொள்ளவும்.
- LMS இல் விடைத்தாளைப் பதிவேற்றுவதில் **எதிர்பாராத விதமாக தொழில்நுட்பச் சிக்கல்** ஏதேனும் ஏற்படின், நீர் உமது விடைத்தாளை exam3@arts.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் ஊடாக நிர்ணயிக்கப்பட்ட 24 மணித்தியாலத்திற்குள் அனுப்பலாம்.

## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

### கலைப் பீடம்

**கலைமாணி மூன்றாம் வருடப் பரீட்சை (நிகர்நிலை) பருவம் I - 2019/2020**

**GYG 3150 – கடந்த காலக் காலநிலையும் காலநிலை மாற்றமும்**

**திறந்த நூற் பரீட்சை**

**காலம்**: விடைத்தாள்களைப் பூர்த்திசெய்வதற்கும், LMS இல் சமர்ப்பிப்பதற்கும் **24 மணித்தியாலங்கள்**

இவ்வினாத்தாள் **ஆறு (06)** வினாக்களைக் கொண்டுள்ளது.

**மூன்று (03)** வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

ஓவ்வொரு வினாவிற்குமான **அதிகூடிய சொற்களின் அளவு மற்றும் புள்ளிகள்** தரப்பட்டுள்ளன.

…………………………………………………………………………………………………..

(1)

(i) புவியின் கடந்த காலக் காலநிலை மாற்றங்களுக்குப் பங்களிப்புச் செய்திருப்பதாகக் கருதப்படும் புவிக்கு வெளியிலானக் காரணிகளில் (extra-terrestrial factors) இரண்டினை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(ii) புவியின் பண்டைய புவிச்சரிதவியல் காலத்தில் (the geological past of the Earth) பூகோளரீதியிலான காலநிலை மாற்றங்களுக்கு மலையாக்கச் செயன்முறை (mountain building) பங்களிப்புச் செய்தது என்ற கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையினை ஆராய்க.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(2)

(i) புவியின் கடந்த காலக் காலநிலையைக் கற்பதற்கு முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு (02) சான்றுகளைத் தெரிவுசெய்து, அச்சான்றுகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பாக ஆராய்க.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(ii) புவியின் கடந்த காலக் காலநிலையைக் கற்கும் பொழுது எழக்கூடியத் தடைகளைப் பற்றிப் பரிசீலிக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(3)

(i) அமில மழை பிரச்சினையால் உலகின் உயர் அகலக்கோட்டு வனப்போர்வைகள் (higher latitude forest covers) ஏன் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன என்பதை குறிப்பிட்ட உதாரணங்களைக் காட்டிப் பரிசீலிக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(ii) ‘‘அமில மழை பிரச்சினையை இழிவளவாக்குவதற்கு சர்வதேசரீதியில் பொருத்தமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன’’. என்ற கருத்துடன் நீர் உடன்படுகின்றீரா? ஆராய்க.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(4)

(i) முனைவுப் படைமண்டல முகில்கள் (polar stratospheric clouds) இல்லாது ஓசோன் தேய்வடைதல் செயன்முறையை (ozone depleting process) விளக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(ii) அயனமண்டலப் பிராந்தியத்தில் ஓசோன் தேய்வடைதல் ஒப்பீட்டளவில் குறைவாக அறிக்கையிடப்படுவதற்கான (reporting comparatively less) காரணிகளைப் பரிசீலிக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(5)

(i) காலநிலை மாதிரியுருக்களை (climate models) விருத்திசெய்யும் பொழுது கருத்திற்கொள்ளப்பட வேண்டிய பிரதான கூறுகளை (major components) விளக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(ii) தீவிர வானிலை (extreme weather) நிகழ்வுகள் காரணமாக உலகில் நிகழக்கூடும் என எதிர்பார்க்கப்படும் தாக்கங்கள் தொடர்பாக ஆராய்க.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(6)

(i) கடல் மட்ட உயர்வு தொடர்பான எதிர்கால எதிர்வுகூறல்களை (future predictions) குறிப்பிட்ட உதாரணங்களைப் பயன்படுத்தி ஆராய்க.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)

(ii) கடல் மட்ட உயர்வு காரணமாக ஏற்படக்கூடிய தாக்கத்தின் எதிர்கால எதிர்வுகூறல்கள் (future predictions) தொடர்பாகப் பரிசீலிக்குக.

(சொற்கள் 600: 10 புள்ளிகள்)